## நாட்டில் நடைபெறுவது இரு சித்தாந்தங்களுக்கு இடையிலான போர்!

# அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து பா.ஜ.க.வை வீழ்த்துவோம்!

## பாட்னாவில் ராகுல்காந்தி பேட்டி!



பாட்னா, ஜூன் 24-
நாட்டில் நடைபெறுவது இரு சித்தாந்தங்களுக்கு இடையிலான போர் என்றும், எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பாரதிய ஜனதாவை வெல்வோம் என்றும் ராகுல்காந்தி குறிப்பிட்டார்.

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி பாட்னா வந்தடைந்தார். அவர் காங்கிரஸ் அலுவலகம் சென்று கட்சித் தலைவர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசும்போது "இந்தியாவில் தற்போது நடைபெற்று கொண்டிருப்பது இரு சித்தாந்தத்திற்கு இடையிலான போர். ஒரு பக்கம் காங்கிரசின் ஒற்றுமைச் சித்தாந்தம். மறுபக்கம் பா.ஜனதா மற்றும் ஆர்.எஸ்.எஸ்.ஸின் பிரிவினைச் சித்தாந்தம். வெறுப்புணர்ச்சியை அன்பால்தான் வெல்ல முடியும், வெறுப்பால் வெல்ல முடியாது.

பா.ஜனதா வன்முறை, வெறுப்பைப் பரப்புதல், நாட்டைப் பிரிக்கும் வேலையில் ஈடுபட்டு வருகிறது. நாங்கள் அமைதி, ஒற்றுமைக்காக வேலை செய்து வருகிறோம். இங்கு அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களும் வந்துள்ளனர். ஒன்றிணைந்து பா.ஜனதாவை தோற்கடிப்போம் என்றார்.

## டைட்டானிக் கப்பலை காண சென்ற 5 பேரும் உயிரிழப்பு!

கனடா,ஜூன்.24-
டைட்டானிக் கப்பலை காண சென்ற 5 பேரும் உயிரிழந்துள்ளனர்.

நீர்மூழ்கி கப்பல் கடலுக்கடியில் சுமார் 1600 அடி ஆழத்தில் கண்டறியப்பட்டுள்ளதாகவும், நீர்மூழ்கி கப்பல் வெடித்துச்சிதறியதாகவும் நீர்மூழ்கி கப்பலில் பயணித்த 5 பேரும் உயிரிழந்ததாகவும் அமெரிக்க கடலோர காவல்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உயிரிழந்த அனைவரின் குடும்பத்திற்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளையொட்டி, கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் கழக ஒன்றியத்திற்குட்பட்ட, மூத்த திமுக நிர்வாகிகள் 10 நபர்களுக்கு பொற்கிழி மற்றும் நலத்திட்டங்களை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்,கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கழக முன்னோடிகளின் இல்லத்திற்க்கே சென்று நலம் விசாரித்து பொன்னாடை போர்த்தி பொற்கிழிகளை வழங்கினார். அதன்படி மூத்த கழக முன்னோடிகள் கலியமூர்த்தி, தங்கசாமி, கோவிந்தசாமி,சீத்தாராமன்,சண்முகம்,கண்ணையன், ராகவன், ராஜமானுஜம், ஆழ்வார், தட்சிணாமூர்த்தி ஆகியோருக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர்கள் முத்துசாமி, ராமலிங்கம், ஒன்றிய அவைத்தலைவர் கருணாநிதி,நகர செயலாளர் கணேசமூர்த்தி, ஒன்றிய துணை செயலாளர்கள் பழஞ்சநல்லூர்பாஸ்கர், பாலமணிகண்டன், நிஜார்அகமது, மாவட்ட பிரதிநிதிகள் ராஜேந்திரன், கல்யாணசுந்தரம், பூக்கடைசெந்தில், பழனிராஜா,நகர துணை செயலாளர்கள் சுப்ரமணியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## என்.கௌதமன் ஏற்பாட்டில் - நாகை மாவட்டத்தில் கழக மூத்த முன்னோடிகள் 700 பேருக்கு

# தலா ரூ.10,000 - பொற்கிழி: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - உ.மதிவாணன் பங்கேற்பு!

நாகை, ஜூன் 24 -
கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன்மற்றும்விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் நாகை மாவட்டத்திற்கு கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கவும், பெண்களுக்கு தையல் இயந்திரம், ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் காப்பீடு, மாணவ, மாணவிகளுக்கு விளையாட்டு உபகரணம் ஆகியவை வழங்க வருகை தந்தார்கள்.

மயிலாடுதுறை மாவட்டம் திருவெண்காட்டில் இருந்து நாகை மாவட்டத்திற்கு வந்த அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு நாகை மாவட்ட எல்லையான வாஞ்சூர் ரவுண்டானாவில் இருந்து விழா நடைபெற்ற இ.ஜி.எஸ். பிள்ளை கல்லூரி வரை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் தலைமையில், சட்டத் துறை அமைச்சர், நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் ஆயிரக்கணக்கான கழகத்தினர் முன்னிலையில் மாபெரும் வரவேற்பு வழங்கப்பட்டது.

அப்போது 300க்கும் மேற்பட்ட கழகத்தைச் சேர்ந்த பெண்களும், 500க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகளும் அமைச்சர் உதயநிதிஸ்டாலினுக்கு மலர் தூவி வரவேற்பு அளித்தனர். அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் மழையால் நனைந்தவாறு மகிழ்ச்சியுடன் வரவேற்பை ஏற்றுக்கொண்டார். அதைத் தொடர்ந்து நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் 700 கழக மூத்த முனோடிகளுக்கு ரூ. 10,000, வேட்டி, சட்டை, கருப்பு, சிவப்பு துண்டு, பேக் மற்றும் கேடயத்தை கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் வழங்கினார்.

பின்னர் 320 பெண்களுக்கு தையல் இயந்திரத்தையும், 500 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை, காப்பீட்டையும், 500 விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கி சிறப்புரையாற்றினார். அதைத்தொடர்ந்து நாகை மாவட்டம் வேளாங்கண்ணியில் கீழையூர் ஒன்றியக் கழகச் செயலாளர் தாமஸ், வேளாங்கண்ணி பேரூராட்சி துறைத் தலைவர் ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் ஏ. எல். டயானாஷர்மிளா ஆகியோர் சகோதரர் ஏ.மரியசை - நிக்சன் ஜெ.பெபின் திருமணத்தை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் தலைமை தாங்கி நடத்தி வைத்தார். நிகழ்ச்சிகளில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் இளையராஜா, கழக தீர்மானக்குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நாகை அ.அசோகன், மாநில மீனவர் அணி துணை அமைப்பாளர் ஜி.மனோகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், க.ராஜேந்திரன், க.மறைமலை மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் கோ.ரவிச்சந்திரன், ஆரூர்மணிவண்ணன், கற்பகம், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் எல்.எஸ்.சு.பழனியப்பன், எம்.பன்னீர்செல்வம், உமா செந்தாமரைசெல்வன், கோ.சி.குமார், இல.பழனியப்பன், எம். பாண்டியன், எஸ்.பி.டி. சார்லஸ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த், கே.பழனியப்பன், என். சதாசிவம், உதயம் எம். முருகையன், சோ.பா.மலர் வண்ணன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார்,

பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், முகமது சுல்தான், சுப்பிரமணியன், மாநில சிறுபான்மை அணி துணைச் செயலாளர் சாகுல் அமீது, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர்.டி.ஆர் (எ) ஆர்.துரைராஜ், ப.உதயக் குமார், செல்வராணி, எஸ்.வி.டி.அருள், இரா.முருகையன், கேஸ் வி.செந்தில், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, பெ.முருகானந்தம், சத்தியமூர்த்தி, எஸ்.கே.ஜி.ஏ.சேகர், சாதிக் ஜபார், சிங்காரவேல், மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் , கழக மூத்த முன்னோடிகள், கழக செயல் வீரர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

# மக்களின் ஒருவிரல் புரட்சிக்கு முன்னால் மதப் பிரச்சாரம் எடுபடாது!

என் இனிய தமிழ்ச் சொந்தங்களே.........

எங்கள் வீர வரலாற்றின் இன்றைய கரிகாலன் எமது முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின் என்பதிலே எவருக்குமே சந்தேகமில்லை. நாங்க திருப்பி அடிச்சா தாங்க மாட்டீங்கன்னு அவர் சொன்னது ஒரு உதாரணம் தான். ஒன்றிய அரசு என்ன உங்க பாட்டன் வீட்டு சொத்தா? சட்டங்கள் போட்டு ஜனநாயகத்தின் குரல்வளையை நீங்கள் நெரிப்பதும் ஆளுநர் அமலாக்கத்துறை, வருமானவரித்துறை, துணை ராணுவம் இவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு அமைச்சர்களை கைது செய்வதும் அனுமதி இன்றி தலைமைச் செயலகத்துக்குள் நுழைந்து அதிகார துஷ்பிரயோகம் செய்வதும் ஏற்புடையதா?

இதைப் பற்றி ஐ.நா. சபையிலே பேசிப் பார்க்கலாமா? அல்லது மேடை போட்டு இந்திய மக்களிடம் பேசலாமா? அமெரிக்க நாட்டுக்குள் நுழையக்கூடாது என அனுமதி மறுக்கப்பட்ட இந்திய மாநில முதல்வர் யார் என்பது மக்களுக்கு மறந்து விடும் என்று நினைக்கிறீர்களா? அல்லது அதே மாநிலத்து அமைச்சர் செய்த குற்றங்களையும் அதற்காக அடைந்த தண்டனையையும்நாம் மேடை போட்டு பேசலாமா?

வால்மீகி குணம் மாறி ராமாயணத்தை எழுதினார். அதை படித்த அந்த மாநிலத்தின் குற்றவாளிகள் ஒன்றிய பதவிகளுக்கு வந்த பின்னால் நாட்டை வேட்டைக்காடு ஆக்கி ஜனநாயகத்தைக் கொன்று மாநிலங்களை மடக்கிப் பிடித்து சன்மார்க்க அரசியலையும் சர்வாதிகார ஆட்சியையும் நிறுவ முயன்றால் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வா நமது ஸ்டாலின் அவர்களை நமது மக்கள் முதல்வராக தேர்ந்தெடுத்தார்கள்?

ஒன்றிய ஆட்சியின் செயல்களை இந்த மாநில மக்கள் ஒப்புக் கொள்வதாக இருந்தால் நீங்கள் அமைத்த கூட்டணி அல்லவா மீண்டும் ஆட்சியைப் பிடித்திருக்க வேண்டும்? தோல்வியை ஒப்புக்கொள்ளும் வீரமற்ற நீங்கள் துரோகச் செயல்களை தொடர்ந்து செய்தால் அதனைத் தடுக்க திருப்பி அடிப்பது முதல்வர் என்ற பதவியின் கடமை.

மாநிலங்களின் பிரதிநிதிகள் தான் நீங்கள்.வானத்திலிருந்து குதித்து வந்தவர்கள் அல்ல.நீங்கள் அடித்தால் நமது அமைச்சர் இருதய அறுவை சிகிச்சைக்குப் போவார். ஆனால் அனைத்து மாநில ஏழை இந்திய மக்களும் நமது முதல்வர் ஸ்டாலின் அவர்கள் சொன்னது போல திருப்பி அடிக்க ஆரம்பித்தால் உங்களுக்கு ஓடி ஒளியக் கூட இடம் கிடைக்காது. திமிறி எழ வேண்டிய ஏழை மக்களை கார்ப்பரேட்டுகளின் சுயநல அறக்கட்டளைகள் மூலம் அடக்கி வைக்க முயல்கிறீர்கள். மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு பதிலாக ஒன்றிய அரசை இந்தியாவின் ஒற்றை அதிகார மையமாக மாற்றுவதற்கு முயற்சி செய்கிறீர்கள்.

இந்த ஆபத்தான விளையாட்டில் பங்கேற்பதற்கு நமது முதல்வர் தயாரானவர் அல்ல.அவர் ஒளி வழுங்கும் உதயசூரியன். பெரியாரின் பல்கலைக்கழகத்தில் பகுத்தறிவு பாடம் கற்றவர். அண்ணாவிடம் அரசியல் ஆயுதத்தை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதனை கற்று முடித்த தளபதி.எதிரியை நோகாமல் அடித்து மடக்கும் கலையை கலைஞரிடம் கற்றவர். எல்லாவற்றிற்கும் மேலாக இத்தனை ஆண்டுகளாக இந்திய அரசியலை ஆட்டி வைத்த சன்மார்க்க சனாதன அரசியலுக்கு எதிர் திராவிட அரசியலே என்று தைரியமாக இந்திய மக்களிடம் பிரகடனப்படுத்திய திராவிட தலைவர்.

குட்ட குட்ட குனிகிறவன் முட்டாள்.குனிய குனிய மேலும் மேலும் குட்டுகிறவன் அதைவிட அடி முட்டாள். இது யாரை நோக்கி சொல்லப்படுகிறது என்பது படிப்பவர்களுக்கு புரியும். கற்றுக் கொடுக்கும் இனம் எங்கள் இனம். எழுத்தறிவித்த இறைவன் கூட்டம் எமது கூட்டம். மனிதன் படைத்த அனைத்தையும் மாற்றி விட முடியும். ஆனால் தமிழன் படைத்த சிலவற்றை மாற்றவே முடியாது. திருக்குறளை மிஞ்சிய முப்பாலை சொல்லுகின்ற ஒரு நூலை காட்டுங்கள் பார்க்கலாம். வரப்புயர என்ற ஒற்றை வார்த்தையில் விவசாயத்தின் உச்சத்தை தொட்டுக் காட்டிய இன்னொரு படைப்பை கேட்டதுண்டா? திருமந்திரம் எங்கள் சைவ நெறி தந்திரம்.

நாட்டுக்குள் ஒரு நாட்டை படைத்த கூட்டம் எங்கள் திராவிட கூட்டம். விந்தியத்தை தாண்டி எப்போதுமே வரமுடியாத நீங்கள் மறந்திருக்க முடியாது. இமயத்திலே கொடி நாட்டிய எங்கள் செங்குட்டுவன் கொடி மட்டுமா நாட்டினான்? அந்த ஊர் மன்னர்களை கண்ணகிக்கு கோட்டம் அமைக்க கல் சுமக்க வைத்தவன் ஆயிற்றே.

நட்பை நாடுவதும்,வந்தாரை வாழ வைப்பதும் நமது பண்பாடு. பிரித்து வைப்பதும், மதத்தை மையப்படுத்துவதும், ஆரியத்தை வளர்ப்பதும், பகுத்தறிவை சிதைப்பதும், சன்மார்க்க அரசியலை ஊக்குவித்து சமஸ்கிருதத்தை பரப்புவதும் உங்கள் பண்பாடு.

மக்களின் ஒரு விரல் புரட்சிக்கு முன்னால் மதப் பிரச்சாரமும், கார்ப்பரேட்டுகளின் வளர்ச்சியும் எடுபடாது என்பதை 2024 நாடாளுமன்றத் தேர்தலிலே நீங்களே புரிந்து கொள்வீர்கள். ஏனெனில் உங்களை திருப்பி அடிக்க நமது முதல்வர் மட்டுமல்ல; இந்திய மக்களே அவர் பின்னால் அணிவகுக்க ஆரம்பித்து விட்டார்கள்.



வி.செ.குகநாதன்
திரைப்பட இயக்குநர்

## நகர்ப்புற நலவாழ்வு மையங்கள்

# மக்களுக்கு பயனளிக்கும் மகத்தான திட்டம்!

சென்னை, ஜூன் 24-
தமிழ்நாடு அரசின் நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் மக்களுக்கு பயனளிக்கும் மகத்தான திட்டம் என்று 'தினத்தந்தி' நாளேடு புகழாரம் சூட்டி தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:-

### 'தினத்தந்தி' நாளேடு புகழாரம்!

உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான், எந்த செயலையும் உற்சாகமாக செய்ய முடியும். அதனால்தான், "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை முன்னோர்கள் மட்டுமல்லாமல், இப்போதும் பெரியவர்கள் அறிவுரையாக சொல்லி வருகிறார்கள்.

முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினும் பல கூட்டங்களில் பேசும்போது கல்வியையும், மருத்துவத்தையும் அரசு தனது இரு கண்களாக பாவித்து அதற்கேற்ற திட்டங்களை தீட்டிவருகிறது என்று கூறுவது வழக்கம். மருத்துவ வசதிகள் அனைவருக்கும் தங்கு தடையில்லாமல் கிடைக்க வேண்டும் என்பதில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

கிராமப்புறங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், தாலுகா அளவில் மருத்துவமனைகளும், மாவட்ட மருத்துவமனைகள், மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளும் மக்களுக்கு தேவையான மருத்துவ பரிசோதனைகள், மருத்துவ சிகிச்சைகளை வழங்கி மருந்து மாத்திரைகளையும் வழங்கி வருகின்றன.

நகர்ப்புறங்களில் பெரிய மருத்துவமனைகள் இருந்தாலும், மக்களுக்கு வீட்டுக்கு அருகிலேயே மருத்துவ வசதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், ஆட்சி பொறுப்பேற்ற ஓராண்டு நிறைவடைந்த நாளான கடந்த ஆண்டு மே 7ந் தேதியன்று முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் 110வது விதியின் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், "தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் இருப்பதைப்போல, நகர்ப்புறங்களில் அரசு பொது மருத்துவமனைகளை நோக்கி மக்கள் கூட்டம் அலைமோதி வரும் நிலையை மாற்றும் வகையில், ஒருங்கிணைந்த, தரமான மருத்துவ சேவைகளை மக்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வழங்கிடும் வகையில், சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 21 மாநகராட்சிகள், மற்றும் 63 நகராட்சி பகுதிகளில் 708 நகர்ப்புற மையங்கள் புதிதாக அமைக்கப்படும்" என்று அறிவித்தார்.

இப்போது முதல் கட்டமாக சென்னை உள்பட மாநகராட்சி, நகராட்சி பகுதிகளில் 500 நகர்ப்புற நல வாழ்வு மையங்களை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்துள்ளார். ஒவ்வொரு நகர்ப்புற நல வாழ்வு மையங்களிலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர், ஒரு தூய்மை பணியாளர் ஆகியோர் பணியாற்றுகிறார்கள். இதை தொடங்கியதன் மூலம் புதிய வேலை வாய்ப்புகளும் டாக்டர்கள், மருத்துவ பணியாளர்களுக்கு கிடைத்துள்ளன.


தலையங்கம்
தினத் தந்தி
23.6.2023 (வெள்ளிக்கிழமை)
நகர்ப்புற நல வாழ்வு மையங்கள்!
உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான், எந்த செயலையும் உற்சாகமாக செய்ய முடியும். அதனால்தான், "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை முன்னோர்கள் மட்டுமல்லாமல், இப்போதும் பெரியவர்கள் அறிவுரையாக சொல்லி வருகிறார்கள். முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினும் பல கூட்டங்களில் பேசும்போது கல்வியையும், மருத்துவத்தையும் தனது அரசு இரு கண்களாக பாவித்து அதற்கேற்ற திட்டங்களை தீட்டிவருகிறது என்று கூறுவது வழக்கம். மருத்துவ வசதிகள் அனைவருக்கும் தங்கு தடையில்லாமல் கிடைக்க வேண்டும் என்பதில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.
கிராமப்புறங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், தாலுகா அளவில் மருத்துவமனைகளும், மாவட்ட மருத்துவமனைகள், மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளும் மக்களுக்கு


இந்த நகர்ப்புற நல வாழ்வு மையங்களில் மகப்பேறு நல சேவைகள், பச்சிளம் குழந்தை மற்றும் குழந்தை நல சேவைகள், வளர் இளம் பருவத்தினருக்கான சேவைகள், குடும்ப கட்டுப்பாடு சேவைகள், தொற்று நோய்களுக்கான சேவைகள், தொற்றாநோய்களுக்கான சேவைகள், கண், காது, மூக்கு, பல், வாய் மற்றும் தொண்டை நோய்களுக்கான சேவைகள், முதியோர் மற்றும் நோய் ஆதரவு சேவைகள், அவசர மருத்துவ சேவைகள், மனநல சேவைகள் மற்றும் யோகா போன்ற பல்வேறு நலவாழ்வு சேவைகள் வழங்கப்படுகின்றன.

மேலும் 172 வகை முக்கியமான மருந்துகளும், 64 வகை அவசியமான ஆய்வக சேவைகளும் ஆண்டு முழுவதும் இந்த நகர்ப்புற நல வாழ்வு மையங்களில் தங்கு தடையின்றி கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது மிகவும் வரவேற்புக்குரியது.

இந்த நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் மூலம் நகர்ப்புறங்களில் உள்ள ஏழை எளிய, நடுத்தர மக்களுக்கு அவசர சேவைகள் உள்பட அனைத்து சேவைகளும் வீட்டுக்கு அருகிலேயே குறைந்த நேரத்தில் கிடைக்கும் என்பதால், இந்த மருத்துவ திட்டம் ஒரு மகத்தான திட்டம். மக்களுக்கு பயனளிக்கும் திட்டம். மக்கள் வரவேற்கும் திட்டம்.

இவ்வாறு 'தினத்தந்தி' நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

## நடிகர் போஸ் வெங்கட்டின்

# சகோதரி - சகோதரர் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜீன்.24-
நடிகர் போஸ் வெங்கட்டின் சகோதரி, சகோதரர் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2020ஆம் ஆண்டு சன் டிவியில் ஒளிபரப்பான மெட்டிஒலி சீரியல் மூலம் நடித்து பிரபலமான வர் நடிகர் போஸ் வெங்கட். அதனைத் தொடர்ந்து தனது யதார்த்த நடிப்பால் சினிமாவிலும் கால்தடம் பதித்து தனக்கென தனியிடத்தை பிடித்தார். அதன்படி, குணசித்திர நடிகர் மற்றும் வில்லன் கதாபாத்திரங்களில் சிறப்பாக நடித்து வருகிறார். மேலும், இவர் தமிழ் மட்டுமில்லாமல் மலையாளம் மற்றும் கன்னடம் ஆகிய மொழி திரைப் படங்களிலும் நடித்து வருகிறார்.

இவர் நடிகராக மட்டுமில்லாமல் கடந்த 2020ம் ஆண்டு வெளியான கன்னிமாடம் என்ற திரைப்படத்தையும் இயக்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் நடிகர் போஸ் வெங்கட் குடும்பத்தில் நேற்று ஒரே நாளில் 2 உயிரிழப்புகள் ஏற்பட்டு பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

போஸ் வெங்கட்டின் சகோதரி வளர்மதி நேற்று காலை மாரடைப்பால் உயிரிழந்தார். தகவல் அறிந்து, அவரது இறுதி சடங்கிற்கு போஸ் வெங்கட்டின் சகோதரர் ரங்கநாதன் அறந்தாங்கியில் இருந்து விரைந்து வந்து மறைந்த சகோதரியின் உடல்மீது சாய்ந்து கதறி அழுத நிலையில் அவருக்கும் திடீர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார்.

போஸ் வெங்கட்டின் மறைந்த சகோதரியின் உடல் நேற்று சென்னையில் அடக்கம் செய்யப்பட்டது. அவரது சகோதரர் மறைந்த ரங்கநாதன் உடல் சொந்த ஊரான அறந்தாங்கிக்கு எடுத்து செல்லப்பட்டு இன்று இறுதி சடங்குகள் நடைபெறுகிறது.

நடிகர் போஸ் வெங்கட்டின் சகோதரி மற்றும் சகோதரர் இருவரின் திடீர் மறைவு செய்தி அறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் போஸ் வெங்கட் மற்றும் மறைந்த குடும்பதாருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.



புதுடெல்லி மோத்திபாக் தமிழ் கல்வி கழக பள்ளியில் நேற்று (23.06.2023) முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி பேச்சுப்போட்டியை தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கலைஞரும் கலையும், கலைஞரும் ஆட்சியும், கலைஞரும் சமூக நீதியும் ஆகிய தலைப்பில் பேசுவதற்காக 22 மாணவ மாணவிகள் கலந்து கொண்டார்கள் முடிவில் 4 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு 25.06.2023 மாலை தில்லி தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் பரிசுகள் வழங்கப்படும். இந்நிகழ்ச்சியில் நடுவராக கே.வி.கே.பெருமாள், எழுத்தாளர், திருமதி. ஷெர்லி ராணி, ஓய்வு பெற்ற ஆசிரியை, போட்டி ஒருங்கிணைப்பாளர் திருமதி இராஜ இராஜேஸ்வரி மற்றும் தில்லி தமிழ் கல்வி கழகத்தின் செயலர் இரா.இராஜு, தமிழ்நாடு இல்லம் பொது மேலாளர் தெய்வ சிகாமணி, பள்ளி முதல்வர் திருமதி ஜெயஸ்ரீ பிரசாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சர்வதேச வீட்டு வேலை பணியாளர்கள் தினத்தை முன்னிட்டு 22.6.2023 அன்று நுங்கம்பாக்கம் குட்செப்பர்டு பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இரா.கிரிராஜன் எம்.பி. மற்றும் தமிழ்நாடு மகளிர் ஆணைய தலைவர் திருமதி எ.எஸ்.குமாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.